# திருப்பாலைத்துறை

1-58

OFFICE OF THE REGISTRAR OF ...
JAN 1958

023:38·21193 PD
N57
1957

112888

# திருப்பாலைத்துறை

9—6—57ல் நிகழும்
மகா கும்பாபிஷேக மலர்

ஸ்ரீ பாலைவனநாதர் ஆலய
கும்பாபிஷேகக் கமிட்டி வெளியீடு
1957

ஞானசம்பந்தம் அச்சகம்
தருமபுரம்.

112888

உ
சிவமயம்

# முன்னுரை

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றார். சிவாலய தரிசனம் இன்றியமையாதது. வழிபாடு மக்களை வாழ்விப்பது. மக்கள் வாழ - அருளொளி பெற ஆலயங்களுக்குக் குடமுழுக்கு நிகழ்த்துதல் வேண்டும். இது அவர் தம் கடமைகளுள் ஒன்று. "கபாலீச்சரமமர்ந்தான் பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்" என்றார் சம்பந்தர். கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தி அல்லது பெருவிழா என்பர். பெருவிழா பன்னீராண்டுக்கொருமுறை செய்யவேண்டுமென்பது சிவாகமவிதி.

திருப்பாலைத்துறை பாடல்பெற்ற தலம். அக்கோயிலுக்குப் பெருவிழா செய்யவேண்டுமென்பது பலர் விருப்பம். விருப்பம் செயலாயிற்று கும்பாபிஷேகக் கமிட்டியாக. தருமபுர ஆதீனத்திலும், ஸ்ரீ காசிமடத்திலும், வேண்டிய உதவிகள் அவ்வப்போதுசெய்தனர். சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் ரூ. 6000 கழக நிதியிலிருந்து நன்கொடையளித்தனர். மற்றும் பல தேவஸ்தானங்களிலிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் நன்கொடையாகப் பல ஆயிரம் வெண்பொற்காசுகள் வந்தன. கும்பாபிஷேகக் கமிட்டியார் அவற்றை ஏற்றுத் திருப்பணிகள் பல புரிந்தனர்.

திருப்பணிகள் முற்றுப்பெற்று எவிளம்பி ஆண்டு வைகாசித்திங்கள் 27 ஆம் நாள் (9—6—57) குடமுழுக்கு விழா நிகழ்த்தப்பெறுகிறது. தமிழகமக்கள் கண்டு களித்து இருமைப் பயனும் எய்தும் வாய்ப்பு இது. சென்னை அறநிலையக் கமிஷனர், திரு. அ. உத்தண்டராமப் பிள்ளை, தஞ்சை டிப்டி கமிஷனர், திரு. சர்க்கரைசேர்வை, தஞ்சை அஸிஸ்டெண்டு கமிஷனர், ஸ்ரீ ரெங்காச்சாரி, பாபநாசம் தாலூகா அறநிலைய இன்ஸ்பெக்டர், திரு. சுப்பராயன் முதலியோரும், திருப்பணிக் கமிட்டியாரும் இத் திருப் பணியை முற்றுவிக்கப் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார்கள். கும்பாபிஷேக நினைவு மலராக இத் தல வரலாறு வெளியிடப்பெறுகிறது.

இப் பணியை முற்றுவிக்கப் பெருமுயற்சி செய்தவர்களுக்கும், நன்கொடை மூலம் உதவியவர்களுக்கும், இத் திருப்பணிக்கு உதவிய பெருமக்களுக்கும், மற்றும் ஒல்லும் வகையெல்லாம் உதவி நின்ற அன்பர்களுக்கும் கும்பாபிஷேகக் கமிட்டியாரின் நன்றியறிதலும் ஸ்ரீபாலைவன நாதரின் திருவருளும் என்றும் நிலைத்து நிற்குமாக. கும்பாபிஷேகத்தைத் தரிசித்தவர்கள் இருமைப்பயனும் எய்துவார்களாக.

திருவடி வாழ்க !

வாழ்க உலகெலாம் !! வளர்க சைவ நலம் !!!

இங்ஙனம்,

கோ. சிவஞானம்

தருமபுர ஆதீனத் தொண்டன்.

திருப்பாலைத்துறை
(பாபநாசம்)
5—6—57.

உ
சிவமயம்

# திருப்பாலைத்துறை

## தலம் :

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி பாய்ந்து பொன் கொழிக்கும் திருநாடாக விளங்குவது சோழநாடு. சோழநாட்டின் பெருமையைத்

“ தண்ணீரும் காவிரியே தார்வேந்தனும் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே ”

எனப் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

அத்தகைய சோழநாட்டில் சைவசமயாசாரியர்கள் பாடல்பெற்ற தலங்களாக விளங்குபவை பல. அவை காவிரி வடகரைத் தலம், தென்கரைத் தலம் என்று பிரிக்கப் பெற்றுள்ளன. தென்கரைத் தலங்களில் பத்தொன்பதாவதாகக் கருதப்படும் தலம் திருப்பாலைத்துறை. ஆளுடைய அரசின் பாடலைப் பெற்றதும், ஆளுடையபிள்ளையால் வணங்கப்பெற்றதுமாயுள்ள பெருமையுடையது திருப்பாலைத்துறை.

## இருப்பிடம் :

இத் தலம் தஞ்சை மாவட்டம் பாவநாசம் பிரிவைச் சார்ந்து கும்பகோணம் - தஞ்சை கற்சாலையையொட்டி எழிலுடன் விளங்குகின்றது. கும்பகோணம் - தஞ்சை

இருப்புப்பாதையில் பாவநாசம் புகைவண்டி நிலையத்தி லிருந்து வடகிழக்காக அரைகல் தொலைவில் உள்ளது.

## தலப் பெயரும், தல விருட்சமும் :

தலப் பெயர் திருப்பாலைத்துறை. பெயரைக் கேட்ட அளவில் பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணைகளுள் பாலை என்ற திணையில் உள்ள தலம் என்று எண்ணலாம். ஆயினும், '' பாலை '' என்பது ஓர் செடி. இச்செடியே இத் தல மரமாகும் (தல விருட்சம்). இவ் வாலயத்தின் அருகிலுள்ள ஆற்றுத்துறை (குடமுருட்டி) சிறப்பாகக் கூறப்பெறுவதால் ஆற்றுத்துறைக்கு அண்மை யிலுள்ள தலம் என்று குறிக்கவே தலப் பெயரில் துறை என்பதைச் சேர்த்து வழங்குகின்றனர்போலும். நாவுக்கரசர் அடைவுத் திருத்தாண்டகத்தில் '' ........... பராய்த்துறை, தென்பாலைத்துறை......... '' என்று கூறுவதிலிருந்து இத் தலம் காவிரித் தென்கரைத் தலத்தில் ஒன்று என்பது தெற்றென விளங்கும்.

## மூர்த்தி :

'' பாலைவனநாதர் '' என்பது இறைவன் திருப்பெயர். '' தவளவெண்ணகைமங்கை '' என்பது இறைவியாரின் திருப்பெயர். இவ்வூரார் அம்மையைத் '' தவளாம்பாள் '' என்றும், இக் கோயிலைத் '' தவளாம்பாள் கோயில் '' என்றும் வழங்குவர்.

## கோயிலமைப்பு :

இக் கோயில் 330 அடி நீளமும், 260 அடி அகலமும் உள்ளது. கோயிலின் முன்புறத்தில் 70 அடி உயரமுள்ள



ஒரு ஐந்துநிலை மாடக்கோபுரமும் அதன் பின்னர் 45 அடி உயரமுள்ள மூன்றுநிலை மாடக்கோபுரமும் இருக்கின்றன மூலவரைச் சுற்றி இரு திருச்சுற்றுக்கள் உள்ளன. உள் மதில் 26 அடி உயரமும், வெளிமதில் 17 அடி உயரமுமாக இருக்கின்றன. தென்மேற்கே அம்மன்கோயில் தனியாகக் கிழக்கு நோக்கியிருக்கிறது.

கோயிலின் உள்ளே மகாமண்டபம், அருத்தமண்டபம் முதலியன உள்ளன. அம்மன் கோயிலிலும் அருத்த மண்டபம் முதலியன அழகுற அமைக்கப்பெற்றுள்ளன.

## தீர்த்தம் :

தீர்த்தமாடுதல் தமிழர் பண்பு. தீர்த்தமாடுங்கால் திருவருளில் தோய்ந்த சிந்தையராய் மூழ்குதல் வேண்டும். ஐம்பெரும் பூதங்களாக இறைவனை வழிபடுகின்றோம்.

> '' பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய்ப் போற்றி
> நீரிடை நானகாய் நிகழ்ந்தாய்ப் போற்றி ''

என்று போற்றித் திருவகவலில், நீரில் கலந்துநிற்கின்றான் இறைவன் என்றும்,

> '' மொய்யார் தடம் பொய்கை புக்குமுகேரென்னக்
> கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
> ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ''

என்று நீரில் மூழ்கும்போதும் இறைவனைச் சிந்தித்து மூழ்க வேண்டும் என்றும்,

> '' எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
> பொங்கு மடு ........ ''

என்பதால் இறைவனே தண்ணீராக விளங்குகின்றான் என்றும் குறிப்பிடுகின்றார் மணிவாசகர். இவ்வாறு தீர்த்

த்தை இறைவனுகவே எண்ணுபவர்கள் நம்நாட்டு மக்கள். ஆதலால்தான் தீர்த்த விசேடமுள்ள தலங்களுக்குச் சென்று தீர்த்தமாடி வழிபடுகின்றனர். இத்தலமும் தீர்த்தச் சிறப்புப் பொருந்தியதாகவே காணப்படுகிறது இத் தலத்தைச்சுற்றி அட்டதிக்குப் பாலகர்கள் நீராடி வழிபட்ட எட்டுக் குளங்களும், எட்டு இலிங்கங்களும் இருந்ததாய்க் கூறப்படுகிறது. ஆனல் அவைகளுள் வசிட்ட தீர்த்தம், இந்திர தீர்த்தம், இயம தீர்த்தம், காவிரி என்ற தீர்த்தங்கள் தான் தற்போது இருக்கின்றன.

## விழாக்கள் :

இக்கோயிலில் ''மாசி மகமே'' பெருவிழாவாகக் கொண்டாடப்பெற்றுள்ளது. இக்கோயிலை நடுநாயகமாகக் கொண்டு ஏழூர்சுற்றும் விழா நடந்ததாகத் தெரிகிறது. ஆனல் இப்பொழுது இது திருநல்லூரைச் சேர்ந்த ஏழூர் களில் ஒன்ருக விளங்குகிறது. மார்கழித் திருவாதிரை, தை மாதப்பிறப்பு, தைப்பூசம், மாசிமகம் ஆகிய நாட்களில் சுவாமி வீதி உலா வரும் வழக்கம் இப்பொழுதும் நடை பெறுகிறது.

## வழிபட்டோர் :

இங்குத் திருமால், பிரமன், அட்டதிக்குப் பாலகர்கள், முதலிய பலரும் வழிபட்டுய்ந்தனர்.

திருநாவுக்கரசர் திருக்கருகாவூர் முதலிய தலங்களை வணங்கிப் பின் இங்கு வந்து பதிகம் பாடிப் பெருவிருப் புடன் உழவாரத் திருப்பணி புரிந்து திருநல்லூரில் நெடுநாள் தங்கினர். திருஞானசம்பந்தர் திருப்புள்ள மங்கையைத் தொழுதெழுந்து பின்னர்த் திருச்சேலூருடன் பாலைத்துறையைச் சேர்ந்து வழிபட்டார்.



## தலத்திருமுறைச்சிறப்பு :

இத்தலத்திற்கு உரியதோரு பாடல் தமிழ் மறையாகிய திருமுறையில் நடுநாயகமணியாக விளங்குவது பாராட்டற் குரியது. தேவார ஆசிரியர்கள் மூவருள் திருநாவுக்கரசர் நடுவாாவர். அவரது திருமுறை மூன்றினுள் இது, திருக் குறுந்தொகைகளடங்கிய திருமுறையிலுள்ளதாகும். அத் திருமுறைப் பதிகங்கள் 101ல் திருக்குறுந்தொகைப் பதிக எண்ணும், யசுர்வேத ,சாகைகளின் எண்ணிக்கையும் ஒத்திருப்பது வியக்கத்தக்கது. இது நடுவினதாகிய 51வதாகும். மற்றெல்லாத் திருக்குறுந்தொகைப் பதிகங் களும், அப்பர் திருப்பதிகங்களும் பத்துப் பாடல்களை உடையனவேனும் இத்திருப்பதிகம் மட்டும் பதினெரு பாடல் களைக் கொண்டு விளங்குவது. இப்பதினென்றின் நடுவண தாகிய ஆறுவது பாடலில் இரண்டாவதடியின் ஈற்றில் 'சிவாய' எனும் திருவைந்தெழுத்தின் சிறந்த பகுதி மிளிர்கிறது.

வேதமும் இவ்வாறே அமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆதிகாலந்தொட்டு 'திரயீ' என்று அழைக்கப்பட்டுள்ள இருக்கு, யசுர், சாமம் எனும் மூன்று வேதங்களுள் இடையிலுள்ள யசுர் வேதத்தின் 101 சாகை களுள் நடுவணதாகிய 51வது போதாயன சாகையில் ஏழு காண்டங்களின் நடுவதாகிய *நான்காவது காண்டமாகிய சதருத்திரத்தின், ஒன்பதாவது பிரச்னத்தின் மத்திய பிரச்னமாகிய ஐந்தாவது உருத்திரத்தின் நடுவிலுள்ள ''நமச்சிவாய'' எனும் வாக்கியத்தின் இடைப்பகுதியே ''**சிவ**'' எனும் திருப்பெயராகும். இதனை :-

" மும்முறையுண்டு மறையின்
முனிவி லெழு காண்டத்திற்
செம்மைதரு நடுக்காண்டஞ்
சேர்ந்த எழுசங்கிதையில்
அம்ம நடுசங்கிதை யிறுதி
யிரேழித்து நடுப்
பொம்மலுற வமர்மனுவின்
பொருளாவன் எவன் மைந்த "

எனச் சிவபெருமான் மேன்மையை இச்செய்யுள் எடுத்து விளக்குகிறது.

## சுற்றியுள்ள திருக்கோயில்கள் :

இதற்குக் கிழக்கே ஒரு கல் தூரத்தில் திருநல்லூரும், தெற்கே 3 கல் தொலைவில் திருக்கருகாவூரும், மேற்கே 1½ கல் தொலைவில் பாவநாசம் என்னும் வைணவக் கோயிலும், 1½ கல் தொலைவில் திருமால்புரம் எனக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள 108 சிவாலயமும், 3 கல் தொலைவில் திருச்சேலூர் என்ற வைப்புத் தலமும், 5 கல் தொலைவில் திருச்சக்கரப்பள்ளி முதலிய ஏழூர்களும் வடக்கே கவித்தலம் என்னும் வைணவக் கோயிலும் இருக்கின்றன.

## வெளி மண்டபங்கள் :

முன் கோபுரத்திற்கு வடகிழக்கில் செட்டி மண்டபம் என்னும் பெரிய மண்டபம் ஒன்றுள்ளது. ஆலயத்திற்குச் சிறிது தூரத்தில் கற்சாலைக்கு வடபக்கம் ஒரு மண்டபமும், வடமேற்கில் ஆற்றங்கரையில் ஒரு தீர்த்த மண்டபமும் இருக்கின்றன. வடகிழக்கில் சுமார் ஒன்றைக்



கல் தூரத்தில் குடமுருட்டி ஆற்றின் வடகரையில் அக்கரை மண்டபம் (ஓடத்துறை மண்டபம்) ஒன்றுண்டு. இம் மண்டபத்தில் பாலைவனநாதர் தமது ஏழூர் விழாவில் தங்கித் தீர்த்தங்கொடுத்தருளுவது வழக்கமாம்.

## வெளிச்சுற்றுக் கோயில்கள் :

வெளியில் கோபுர வாயிலுக்கு வடபக்கம் ஒரு ஐயனார் கோயிலும், கோயில் தீர்த்தத்திற்குத் தென்கரையில் ஒரு பிடாரி கோயிலும், தென்மேற்கு மூலையில் கலங்காமல் காத்தவிநாயகர் (எண்ணெய்ப் பிள்ளையார்) கோயிலும், மேற்கில் வீரபத்திரசுவாமி கோயிலும், வடமேற்கில் அக்கிரகாரத்துப் பிள்ளையார் ஆலயமும் இக்கோயிலின் நான்கு வீதிகளுக்குள்ளிருக்கின்றன.

112888

## பழைய வரலாறு :

" பாண்டவர்கள் வனவாசம் செய்யும்போது அருச்சுனன் பாதாள உலகம் செல்வதற்கு வழி அறியவேண்டி இவ்வூர் வந்து தௌம்மிய ரிஷியை வழி கேட்க அவர் இவ்வூர் இறைவனை வணங்கச் செய்தார். வணங்கியதால் இறைவன் அருச்சுனனுக்குப் பாதாள உலகம் செல்ல வழி காட்டி, வில் வித்தையில் பல அருமைப்பாடுகளையும் அறியச் செய்தார். பின்னர் பாதாளம் சென்று உலூபி என்ற ஓர் அரசிளங்குமரியை மணந்து திரும்பினன் " என்பதும் ஒரு வரலாறு.

பண்டைக் காலத்தில் தாருகா வனத்து முனிவர்கள் முழுமுதற் கடவுளின் அருளின்றி முத்தியடையப் பல வேள்விகள் புரிந்து பார்த்தும், கிட்டாமல் பின் வருந்தித்

தவம் புரிந்தனர். அவர்களை நல்வழிக்குக் கொண்டுவரச் சிவபெருமான் பிக்ஷாடனராகவும், திருமால் மோகினியாகவும் வந்து அவர்களை மனங்கலங்கச் செய்தனர். இதனால் அம்முனிவர்கள் வெகுண்டு கெட வேள்வி புரிந்து ஒரு கொடும் புலியை உண்டாக்கி அதைச் சிவபெருமான் மீது ஏவினர். இவ்வூரில் அதை அவர் உரித்து அதன் தோலை ஆடையாக உடுத்திக்கொண்டார்.

முதல் ஊழியாகிய கிருதயுகத்தில் சிவபெருமானது பற்றற்ற நிலையைக் கலைத்து, இமவான் மகளாகிய பார்வதியை மணம் புரிந்து கொள்ளும்படி செய்ய மன்மதன் பூ அம்புகளை எய்தபொழுது தழல்விழியால் நோக்கி அவனைச் சாம்பராக்கினார். பின்னர் தேவர்கள் வேண்டுதலுக்கிரங்கி அவனை உருவில்லாதவனுக்கிப் பார்வதியை மணம் புரிந்து கொண்டார். காமன் எரிந்த சாம்பல் முட்டாயிருந்ததை அங்குச் சென்ற பிள்ளையார் கண்டு அதிலிருந்து ஒரு உரு அமைத்து உயிருண்டாக்கினார். அவனே பண்டாசுரனாகித் தேவர்களை எதிர்த்துத் துன்புறுத்தினான். அவர்கள் மேருமலைக்குச் சென்று சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர் தேவியாரிடம் தெரிவிக்கச் சொன்னார். அம்மையார் கூறியபடி தேவர்கள் இவ்விடத்திற்கு வந்து ஒரு பெரு வேள்வி செய்தனர். அப்பொழுது அம்மையார் திரிபுரை என்ற உருவத்துடன், நான்கு கைகளிலும் கரும்புவில், பூவாளி, அங்குசம், மலர்மாலை இவற்றைத் தாங்கிக், காட்சி கொடுத்து, கரும்பு வில்லை வளைத்து, மலர் அம்பினால் எய்து, பண்டாசுரனைக் கொன்றாள். அவ்வேள்விக் குண்டத்தின் வெப்பம் யாவராலும் தாங்க முடியாதிருந்ததால், அம்மையாரின் ஆணைப்படி சிவபெருமானை வேண்ட, அவர் வீரபத்திர உருவத்துடன் தோன்றித், தமது தலையில் இருந்த கங்கையை அக்குண்டத்தில்விட



அது குளிர்ந்து ஓர் திருக்குளமாயிற்று. இங்குப் பல முனிவர்கள் வசித்ததால் இதற்குப் 'பிரும்ம வனம்' என்னும் பேயர் உண்டாயிற்று.

இரண்டாவது ஊழியாகிய திரேதா யுகத்தில் பிரமனின் மகனாகிய வசிட்டர் பிரம பட்டம் அடையக் கங்கைக் கரையில் பல ஆண்டுகள் தவம் செய்தும் பயனடையாமல், இக் குளக்கரையிலிருந்து அரச மரத்தடியில் காவிரி மணலால் சித்திரை மாதம் சுக்கில பக்கம், பௌர்ணமி, வியாழக்கிழமையாகிய அபிஜித் முகூர்த்தத்தில் சிவக்குறி நிறுவினார். அதனை நீண்டகாலம் அவருடனிருந்த 3000 முனிவரும் பூசித்து வந்ததின் பயனாகச் சிவபெருமான் காட்சி கொடுத்து வசிட்டருக்குப் பிரும்ம ரிஷி என்ற பட்டமும் மற்றவர்களுக்கு ஏற்ற பட்டங்களும் அளித்தார். பின்னர் விசுவகர்மாவின் உதவியால் அம்மையாரின் திருவுருவத்தைச் சிவக்குறியின் தென்பால் நிறுவிப் பூசித்தார். அம்பிகையும் மகிழ்ச்சியினால் புன்னகையுடன் விளங்கியதால், உலக முழுவதும் திடீரென்று நிலவு வீசிற்று. அதனால் யாவரும் அவரைத் தவளவெண்ணகை மங்கையென்றழைத்தனர். அவர்களுக்கு வேண்டிய வரங்கள் ஈந்து மறைந்தபின் நெடுங்காலம் பூசித்ததால் (மணல்) இலிங்கம் இறுகி இப்பொழுதுள்ள நிலையை அடைந்தது. இதனால் ஏனைய சுயம்புவைவிட இது மேலானதன்றி, இதனை வணங்குவதாலும், இவ்வூரில் இருப்பதாலும் பெரும் பயன் அடைகிறார்கள். இந்த ஊழியில்தான் இத்தலம் அரசங்காடு எனவும், இத்தீர்த்தம் வசிட்ட தீர்த்தம் எனவும் அழைக்கப்பட்டது.

மூன்றும் ஊழியாகிய துவாபரயுகத்தில் இவ்விடத்தில் அரச மரம் போய்ப் புன்னை மரம் முளைத்ததால்

இது புன்னுகக்காடு என்றழைக்கப்பட்டது. வைகாசி மாதம் விசாக நட்சத்திரம் பௌர்ணமி திதியில் வசிட்டர் முதலியோர் திருவைந்தெழுத்து தெளிவிக்கப் பெற்று உடல் உயிர் தூய்மை அடைந்தார்கள். பின், திருப்பணி, புரிந்து, மாசி மாதம் சுக்கில பட்சம் அசுவதி நட்சத்திரத்தில் வாஸ்து சாந்தி அங்குரார்ப்பணம் செய்து புனர்பூச நட்சத்திரத்தில் தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நிகழ்த்தி, இந்திரன் நட்சத்திர மாலையையும், வருணன் முத்துமாலையையும், அக்கினி பலவித விசித்திர ஆபரணங்களையும், குபேரன் நிறைந்த செல்வத்தையும் வலம்புரிச் சங்கத்தையும் பெருமானுக்கு அர்ப்பணித்தார்கள்.

இராமபிரான் இராவணுதியரை வென்று இராமேச்சுரம் முதலிய தலங்களில் கொலைப்பழி நீங்க வழிபட்டு அயோத்திக்குச் செல்லும்போது, தனது குரு (வசிட்டர்) வழிபட்ட தலம் இதுவாதலின் இதன் அருகே 108 சிவலிங்கம் நிறுவிப் பூசித்துத் தன் பழி நீங்கப்பெற்ருர்.

மலயத்துவச பாண்டியன் தன்னுட்டில் சிறந்த புண்ணிய நதியாகிய தாமிரபரணியில் நீராடி அதனருகிலிருந்த காலவ முனிவரின் குடிலின் அருகில் சென்ருன். அங்கிருந்த காலவ முன்'வா அவனை வரவேற்றுப் பல நல்லுபதேசங்களைக் கூறினர். அவரது உபதேசத்தை அவன் தன் ஊழ்வினையால் செவி மடுக்காது அரசர்கள் தான் பெரியவரெனக் கூறினன். அதனுல் வெகுண்ட முனிவர் அவனைக் காடியாகும்படி சபிக்க, அவனும் அவ்வுருவைப்பெற்று வனமெங்கணும் திரியலானுன். அவன் மனைவி பத்மாவதி மன்னிப்புக் கேட்டுக்கொண்டதற்கு அவர் இரங்கி அகத்திய முனிவரை வழிபடச்



சொன்னர். அம்முனிவர் இரக்கமுற்று இத்திருப்பாலைத் துறையைச் சுற்றியுள்ள வனத்திற்கேகும்படி அருளினர். அவனும் இத்தலத்திற்கு வந்து திரியும்போது, ஓர் வேடன் இக்காடியை விரட்டி அம்பெய்ய முயன்ருன். இதற்குப் பயந்து அருகில் இருந்த காவிரியில் விழ உடனே தன் சுய உருவாகிய மலயத்துவசனுகிப் பாலைவனநாதரின் பெருமையை உணர்ந்து இவரை வழிபட்டு இங்கே கொடுங்கைகளுடைய திருமண மண்டபமமைத்துத் திருக் கலியாண உற்சவம் நடத்திக் கூடல்மாநகர் சென்ருன்.

## கல்வெட்டுக்களும், பரந்திருப்பணிகளும் :

இக்கோயிலில் 11 கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றுள் முதற்குலோத்துங்கன் ஆட்சியின் 43ம் ஆண்டாகிய கி. பி. 1113ல் வரையப்பெற்ற கல்பெட்டே மிகப் பழமையானது. அதற்குமுன் செங்கல்லினுலான இக்கோயில் அக்காலத்தில் தான் கருங்கற்பணி செய்யப்பட்டிருத்தல் கூடும். அதில் இவ்வூர் சோழமண்டலத்தில் நித்த விநோதவளநாட்டின் உள்நாடுகளில் ஒன்ருகிய நல்லூர் நாட்டில் உள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. அத்துடன் அவ்வரசனின் அதிகாரிகளுள் ஒருவனுன மதுராந்தகப் பல்லவநாட்டு [illegible]வேந்த வேளான் வேண்டுகோளின்படி இக்கோயிற் கிராமமாகிய திருச்சிற்றம்பல நல்லூருக்குச் சிறுவரி பெருவரி ஆகிய எல்லா வரிகளையும் 1113ல் நீக்கப்பட்டது எனத் தெரிகிறது. இவ்வேந்தன் மகன் விக்கிரமசோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. இவன் பேரன் இரண்டாம் இராசராச சோழன் ஆட்சியின் 12ம் ஆண்டுக் கல்வெட்டு வேறெங்கும் காணப்படாத அருமை வாய்ந்த அவலது நீண்ட மெய்க்கீர்த்தியை (பட்டங்கள், புகழ்களை) உடையது. இது குஞ்சிரம் என்ற கிராமம் இராசகம்பீர நல்லூர் என்ற

பெயருடன் திருப்பாலைத்துறையுடைய பெருமானுக்கு நாள் வழிபாட்டிற்கும், நந்தவனத்திற்கும் கி. பி. 1158ல் நிபந்தமாக வழங்கப்பட்டது என்றும் குறிப்பிடுகிறது.

மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்துக் கல்வெட்டு மூன்று. அவற்றுள் ஒன்று கோயில் சம்பந்தம் சிறிதுமின்றி 1190ல் வரையப்பட்டுக் குலதீபநாயகபுரம் எனும் ஊர் சாலியநகரத்தார் அனுமதிப்படி எல்லோருக்கும் நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டதைக் கூறுகிறது. மற்றொன்று தேவதானஊர்களான திருச்சிற்றம்பலநல்லூர், இராசகம்பீர நல்லூர் இரண்டிலும் காணியுடைய பெண்ணாகடமுடையான் செல்வன் பெரியதேவன் நம்பி என்பவன் திருப்பாலைத் துறையுடையார் கோயில் பெரியதேவரையும், நாச்சியாரையும் கி. பி. 1182ல் எழுந்தருளுவித்து அப் படிமங்களின் அணிகலன்களுக்கு முக்கழஞ்சு பொன் அளித்த செய்தி கூறுகிறது.

மூன்றாம் இராசராசசோழன் காலத்தில் கி. பி. 1244ல் நீலகங்கரையன் என்ற அரசியல் அதிகாரி ஒருவன் கீழைத் திருச்சுற்று மாளிகையில் திருஞானசம்பந்தேச்சுரமுடையார் என்ற கடவுளை எழுந்தருளுவித்து அதற்கு வழிபாட்டிற்குத் திருச்சிற்றம்பலநல்லூர், இராசகம்பீரநல்லூர் இவற்றில் நிலங்கள் வாங்கித் தந்ததை ஒரு கல்வெட்டு கூறுகிறது.

ஒரு கல்வெட்டின் பகுதி திருச்சோற்றுத்துறையுடையார் தேவதானமான வேம்பிக்குடியில் காவேரி வல்லவனால் திருப்பாலைத்துறையுடைய பெருமானுக்கு நிலம் அளிக்கப்பட்ட செய்தி கூறுகிறது. அஃது எக்காலத்தது என்பது புலப்படவில்லை.



பிற்காலத்துக் கல்வெட்டுக்கள் இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று சிதைந்துள்ளது. மற்றொன்று கோயிற் குடிகள் ஆடிப்பூர விழாவிற்கு நிலம் வாங்கி அளித்ததைக் குறிப்பிடுவதாகும்.

திருத்தோரணவாயில் என்னும் முதற் கோபுரத்தின் உள்ளே வடசுவரில் இருகயல்மீன்கள் எதிரெதிராகப் பொறித்திருப்பதால் அது பாண்டியர்களால் 13ம் நூற்றாண்டில் புதுப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அப்பாண்டியன் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனாகவாவது, முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியனாகவாவது இருத்தல் கூடும். சுவாமிகோயில் மாமண்டபத்தில் நான்கு பெருங் கற்றூண்களிருக்கின்றன. அவை விசயநகர வேந்தர் ஆட்சிக் காலத்தில் புதுப்பிக்கப்பட்டதைக் குறிக்கின்றன.

உ
சிவமயம்

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

# தேவாரம்

## திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

நீல மாமணி கண்டத்தர் நீள்சடைக்
கோல மாமதி கங்கையுங் கூட்டினார்
சூல மான்மழு ஏந்திச் சுடர்முடிப்
பால்நெய் யாடுவர் பாலைத் துறையரே. 1

கவள மால்களிற் றின்உரி போர்த்தவர்
தவள வெண்ணகை மங்கையோர் பங்கினர்
திவளு வானவர் போற்றித் திசைதொழும்
பவள மேனியர் பாலைத் துறையரே. 2

மின்னின் நுண்ணிடைக் கன்னியர் மிக்கெங்கும்
பொன்னி நீர்மூழ்கிப் போற்றி யடிதொழ
மன்னி நான்மறை யோடுபல் கீதமும்
பன்னி னாரவர் பாலைத் துறையரே. 3



நீடு காடிட மாய்நின்ற பேய்க்கணங்
கூடு பூதங் குழுமிநின் றார்க்கவே
ஆடி னார்அழ காகிய நான்மறை
பாடி னாரவர் பாலைத் துறையரே. 4

சித்தர் கன்னியர் தேவர்கள் தானவர்
பித்தர் நான்மறை வேதியர் பேணிய
அத்த னேநமை யாளுடை யாயெனும்
பத்தர் கட்கன்பர் பாலைத் துறையரே. 5

விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாது சிவாயவென்
றெண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே. 6

குரவ னார்கொடு கொட்டியுங் கொக்கரை
விரவி னார்பண் கெழுமிய வீணையும்
மருவு நாண்மலர் மல்லிகை செண்பகம்
பரவு நீர்ப்பொன்னிப் பாலைத் துறையரே. 7

தொடருந் தொண்டரைத் துக்கந் தொடர்ந்துவந்
தடரும் போதர னாயருள் செய்பவர்
கடலின் நஞ்சணி கண்டர் கடிபுனல்
படருஞ் செஞ்சடைப் பாலைத் துறையரே. 8

மேகந் தோய்பிறை சூடுவர் மேகலை
நாகந் தோய்ந்த அரையினர் நல்லியல்
போகந் தோய்ந்த புணர்முலை மங்கையோர்
பாகந் தோய்ந்தவர் பாலைத் துறையரே. 9

வெங்கண் வாளர வாட்டி வெருட்டுவர்
அங்க ணாரடி யார்க்கருள் நல்குவர்
செங்கண் மாலயன் தேடற் கரியவர்
பைங்க ணேற்றினர் பாலைத் துறையரே. 10

உரத்தி னாலரக் கன்னுயர் மாமலை
நெருக்கி னானை நெரித்தவன் பாடலும்
இரக்க மாஅருள் செய்தபா லைத்துறை
கரத்தி னால்தொழு வார்வினை யோயுமே. 11

திருச்சிற்றம்பலம்

1157
112888